காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

2—1—72

★

உள்ளே......

காத்திருந்து கவனிப்போம்! (தலையங்கம்)

ஜனநாயகம் வென்றது! (கட்டுரை)

வள்ளுவர் காட்டும் காப்பு! (ஆராய்ச்சிக் கட்டுரை)

மன்னிப்பு! (சிறுகதை)

செங்கோலும் மென்தோளும்! (இலக்கியம்)

சோழமாதேவி (தொடர்கதை)

விலை 25 காசு



தேசியப் பாதுகாப்பு நிதிக்காக தமிழக அரசு தலைமைச் செயலக ஊழியர் சங்க சார்பில் முதல் தவணையாக ரூ. 250/-ஐ முதல்வர் கலைஞரிடம் சங்கத் தலைவர் செல்வராசு வழங்கினர்.

ஜனநாயகம் வென்றது!

"கிழக்கு வங்கத்திலுள்ள மேற்குப் பாகிஸ்தானிய படைகள், இந்திய தளபதி லெட். ஜெனரல் அரோராவிடம் நிபந்தனையற்று சரணடைந்து விட்டன. இன்று முதல் டாக்டா நகரம் சுதந்திர வங்க தேசத்தின் சுதந்திரத் தலைநகராகிவிட்டது." என்று இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி டெல்லி நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆசியாவின் வரலாற்றிலேயே முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிவிப்பு ஏற்படுவதற்கு வேறெந்த இனமக்களும் கொடுக்காத விலையை வங்க மக்கள் கொடுத்துள்ளனர்!

பாகிஸ்தான் 1947 ஆகஸ்ட் திங்களில் பிறந்தபோது உலகில் மற்ற நாட்டிற்கெல்லாம் இல்லாத விசித்திர அமைப்போடு பிறந்தது. மேற்குப் பாகிஸ்தான் என்றும் கிழக்கு பாகிஸ்தான் என்றும் பூகோளரீதியாக இரு பகுதிகளாகப் பிரிந்து பிறந்தது. இரு பகுதிகளுக்குமிடையே 1500 கிலோ மீடர். நீளமுள்ள இந்திய மண்! பாகிஸ்தான் உதயமான நாளிலிருந்தே இரு பகுதிகளுக்குமிடையே வெறுப்பும் மனக்கசப்பும் வளர்ந்து வரலாயிற்று. அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மேற்கு வளர்ந்தது; கிழக்கு தேய்ந்தது.

கிழக்கு வங்கத்தின் மக்கள் தொகை 7½ கோடி; மேற்கு பாகிஸ்தானின் மக்கள் தொகை 5½கோடி! ஆனால் உயர்தர அரசு அலுவலர்களில் 85 சதம் பேர் மேற்கு பாகிஸ்தானியர்கள்! உயர்தர இராணுவப் பதவிகளில் 90 சதம் பேர் மேற்கு பாகிஸ்தானியர் வகித்துவந்தனர். பாகிஸ்தானுக்கு வெளிநாடுகள் அளித்து வந்த உதவியில் 70 சதம் மேற்கு பாகிஸ்தானில் செலவிடப்பட்டது. கிழக்கு வங்கம் வஞ்சிக்கப்பட்டது. பாகிஸ்தானுக்குஅந்நியச் செலாவணியை சம்பாதிக்கும் சணலை கிழக்கு வங்கம்தான் பெருமளவில் உற்பத்தி செய்கிறது. ஆனால் தொழில்வளர்ச்சியில் கிழக்கு வங்கம் வஞ்சிக்கப்பட்டது. கடந்த 24 ஆண்டுகளில் வங்கத்தைச் சுரண்டிக் கொள்ளையிட்டு மேற்கு சோலைவனமாயிற்று. கிழக்கு பாலைவனமாயிற்று.

பாகிஸ்தான் தோன்றியதிலிருந்து அரசியல் அடிமைத்தனத்திற்கும், பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஆட்பட்ட கிழக்கு வங்கம் மேற்கின் காலனி நாடாகவேயிருந்தது. புழுவைக் கூட காலால் மிதிக்க மிதித்தவன் காலையே கடிக்கிறது. 7½ கோடி மக்களின் மனம் குமுறும் எரிமலையானால் விளைவு விபரீதமாகாதா?

மேற்கு பாகிஸ்தான்மீது கிழக்கு வங்கத்து 7½ கோடி மக்களின் வெறுப்பையும் ஆத்திரத்தையும் காட்டும் வாய்ப்பை 70 டிசம்பர் பொதுத் தேர்தல் ஏற்படுத்திக் கொடுத்தது. பொதுத் தேர்தலில் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சி மிகப் பெரும்பான்மை வலிவை பெற்றது. மக்களின் குரலுக்கும் ஜனநாயகத் தத்துவத்திற்கும் மதிப்பு கொடுப்பவர்களாக இருந்தால் ஆட்சி அதிகாரத்தை முஜிபுர் ரஹ்மானிடம் ஒப்படைப்பதுதான் முறை. ஆனால் ரஹ்மானின் ஆறு அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் மேற்குப் பாகிஸ்தானின் சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் முடிவு ஏற்பட்டுவிடும். சுயநல ஏகாதிபத்திய வாதிகளும், சுரண்டல்காரர்களும் அதை ஏற்றுக் கொள்வார்களா? கிழக்குவங்க மக்களின் உரிமைக் குரல் பீரங்கிமுனைகொண்டு அடக்கப்பட்டது. பாகிஸ்தான் தோன்றி அந்நாட்டு மக்கள் பொதுத் தேர்தலைச் சந்தித்ததே 70 டிசம்பரில் தான்! ஜனநாயகம் முளையிலேயே கிள்ளி எறியப்படுவதைப்போல் 70 டிசம்பர் தேர்தலில் பெருவாரியான வெற்றி பெற்ற அவாமி லீக் கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டது. அதன் தலைவர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டு இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

தளபதி டிக்காகான் வங்கத்தின் இராணுவ கவர்னராக நியமிக்கப்பட்டான். கடந்த மார்ச் 25-ஆம் நாள் இரவிலிருந்து தளபதி நியாசி சரணடைந்தது வரை, கிழக்கு வங்க மக்கள் ஏட்டில் எழுதமுடியாத கொடுமைகளுக்கும் கொடூரங்களுக்கும் ஆளானார்கள்.

ஜனநாயக ரீதியாக நடந்த தேர்தலில் சுதந்திரமாக வாக்களித்த குற்றத்திற்காக வங்க மக்கள் மிருகங்களைப்போல் வேட்டையாடப்பட்டனர். நிரபராதிகளான நிராயுதபாணிகளான மக்கள் மீது நவீன போர்க் கருவிகளைக் கொண்ட பாகிஸ்தான் இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ஆட்டுக் குட்டிகள்மீது இரத்த வெறி கொண்ட புலிகள் கட்டவிழ்த்து விடப்படுவதைப் போல்!

உலகப் பத்திரிகையாளர்கள் மதிப்பீட்டின்படி ஏறத் தாழ 15 இலட்சம் மக்கள் யாகியாகானின் இராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்டனர். டாக்கா நகர வீதிகளில் பிண மலைகள் குவிந்தன. இரத்த ஆறு பெருகிற்று. புரட்சியின் தூதுவர்கள் அறிஞர்களும் இளைஞர்களும் அன்றோ! ஆகவே ராணுவ ஆட்சியின் ஆத்திரம் டாக்கா பல்கலைக் கழகத்தின்மீது பாய்ந்தது. கல்லூரிப் பேராசிரியர்களும், மாணவர்களும் குருவிகளைச் சுடுவதுபோல் சுட்டு வீழ்த்தப்பட்டனர். மாணவர்களும், இளைஞர்களும் உயிரோடு குழிகளில் புதைக்கப்பட்டு அவர்கள்மீது டாங்கிகள் செலுத்தப்பட்டனவாம்! கல்லூரி மாணவிகளின் விடுதியில் இராணுவத்தினர் நுழைந்து மாணவிகளை நிர்வாணமாக்கி அவர்களைக் கற்பழித்திருக்கின்றனர். பல மாணவிகள் தங்களின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள மாடியிலிருந்து கீழே குதித்து உயிரையே மாய்த்துக் கொண்டனர். டாக்கா பல்கலைக் கழகத்தில் பயின்று வந்த 8000 மாணவர்களின் கதி என்ன ஆயிற்று என்பதே தெரியவில்லை. அவர்களில் பெரும்பாலோர் பாகிஸ்தானியரின் துப்பாக்கி முனைகளுக்குப் பலியாகி இருக்கவேண்டும் என்பது மட்டும் உண்மை.

டாக்காவில் தொடங்கிய இந்த வரலாறு காணாத இனக்கொலை கிழக்கு வங்கத்தின் கிராமங்களுக்கும் பரவியது. நிரபராதிகளைக் கொன்று குவித்தல், பெண்களைக் கற்பழித்தல், கிராமங்சளுக்குத் தீ வைத்தல், சொத்துக்களைச் சூறையாடல்—இவை வங்க தேசத்தில் கடந்த 9 மாதங்களாக அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. பாகிஸ்தானிய இராணுவம் வங்க மண்ணில் நடத்திய கொடுங்கோல் ஆட்சியை தேசிய அவாமி லீக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இர. செங்கல்வராயன், எம். ஏ.



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 2—1—72 | இதழ் 25

காத்திருந்து கவனிப்போம்!

சென்ற டிசம்பர் மாதத் தொடக்கத்தில் நடைபெற்ற இந்தியா - பாகிஸ்தான் போருக்கு முக்கியமான காரணமே அமெரிக்க வல்லரசின் அறிவு முடங்கிய சில போக்குகள்தான் என்பதை, உலக நாடுகளில் பெரும்பான்மையும் உணர்ந்து கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், இன்னமும் அமெரிக்க அரசு, தன் குழப்ப நிலையிலிருந்து முழுமையாக விடுபட்டதாகத் தெரியவில்லை. சர்வாதிகாரி யாகியாகானின் இரங்கத்தக்க நிலையை முன்னிறுத்திக்கூட, பிரத்தியட்ச நிலைமை பற்றி எண்ணிப் பார்க்க விரும்பாத நிக்சனின் போக்கு உலக சமாதானத்துக்கு ஒரு அறைகூவலாகவே இருக்கிறது.

போர் நிறுத்தத்துக்குப் பிறகு, நிக்சனது நடவடிக்கைகளும், விளக்கங்களும் கேலிக்கும் நகைச்சுவைக்கும் உரியதாகக் காணப்படுகின்றன. என்றாலும் அந்த நகைச்சுவைப் பேச்சுக்களுக் கிடையிலும், தன்னை மறந்து ஒரு உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

கடந்த டிசம்பர் 17-ஆம் நாள், இந்தியப் படைகள் மேற்குப் பாகிஸ்தானில், ஒரு தரப்பு முடிவாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டிராவிட்டால், மேற்குப் பாகிஸ்தானும், வங்காள தேசத்தைப்போல சரணாகதி யடையத்தான் நேர்ந்திருக்கும் என்று எடுத்துரைத்திருக்கிறார்.

நிக்சன், அவரை அறியாமலேயே எடுத்துக் காட்டிவிட்ட—அல்லது மூடி மறைக்க முடியாத நிர்ப்பந்தத்தில் எடுத்துக் காட்டிவிட்ட—உண்மை இது.

மேற்கு அரங்கில் இந்தியா போர் நிறுத்தத்தை மேற்கொண்டிராவிட்டால், நிக்சன் எடுத்துக் காட்டும் அந்த உண்மை இதற்குள் நிரூபிக்கப்பட்டு விட்டிருக்கும், ஆனால், இந்தியத் துணைக்கண்டத்துக்கு மண்ணாசை இல்லை என்பதை உலகுக்கு நிரூபித்துக் காட்டும் ஒரு அரிய வாய்ப்பாக, அந்த போர் நிறுத்த அறிவிப்பைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

என்றாலும், எந்த ஒரு வல்லரசின் தூண்டுதல்களை, அல்லது அறிவுரைகளைக் கேட்டுக்கொண்டு யாகியாகானோ, இப்போதைய புட்டோவோ செயல்பட முனைந்தார்களோ, அந்த ஒருவரே, இப்போது எடுத்துக் காட்டியிருக்கும் இந்த உண்மையை, யாகியாகானுக்கு அடுத்துப் பதவியைப் பறித்துக்கொண்டிருக்கும் புட்டோ உணர்ந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. உணரும் அறிவாற்றல் பெற்றிருப்பதாகவும் தெரியவில்லை,

டிசம்பர் 17-ஆம் நாளைக்குப் பிறகு, இதுவரையில் மூன்று தடவைகள் மேற்கு எல்லைப் பகுதியில் ஊடுருவ முயன்று, தாக்குதலையும் தொடங்கி இருக்கிறார்கள் பாகிஸ்தானியர். சென்ற திங்களன்று. பெருமளவுக்குத் தாக்குதல் நடத்தி! அந்த அளவுக்கு உதையும் பட்டுத் திரும்பியிருக்கிறார்கள் ராஜஸ்தான் எல்லையில்.

இதைப் போன்று சில்லரைத் தொல்லைகள் மூலம், மேற்கு பாகிஸ்தானில் உள்ள இப்போதைய ஆட்சியின் மீது அதிருப்தி கொண்டுள்ளவர்களைத் திருப்திப்படுத்த நினைப்பது புட்டோவுக்கு உவப்பான செயலாக இருக்கலாம்.

காலமெல்லாம் பாகிஸ்தானின் காட்டுமிராண்டித் தனத்தைத் தாங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்று இந்தியமக்களும் காலமெல்லாம் ஏமாந்திருக்க மாட்டார்கள்,

ஜனாதிபதி புட்டோ, முஜிபுர் ரகுமானின் விடுதலைபற்றியும் ஏதோ திருவாய் மலர்ந்தருளியுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. அச்செய்திகளில் ஒன்று, கிழக்கு வங்கம் மீண்டும் பாகிஸ்தானுடன் இணைந்திருக்க, முஜிபுர் சம்மதித்தால்தான் விடுதலை செய்யப்படுவார் என்று கூறியிருப்பதாக அறிவிக்கிறது.

கிழக்கு வங்கம்பற்றி இன்னும் இனிய கனவிலே மிதந்துகொண்டிருக்கும் இரங்கல் நிலையினைத்தான் அது புலப்படுத்திக் காட்டுகிறதே ஒழிய, முஜிபுர் ரகுமான் பிரச்னையில், யதார்த்த நிலைமைகளை உணரும் ஆற்றலைக் கொண்டிருப்பதாக எடுத்துக் காட்ட இது பயன்படவில்லை.

புட்டோவின் இந்த அறிவிப்பில், அமெரிக்க அரசின் ஆலோசனையும்கூட கலந்திருப்பதாக அரசியல் அறிஞர்கள் சிலர் எடுத்துக்காட்டியிருப்பதைக் கவனிக்கும்போது, நிக்சன் முன்னர் எடுத்துக்காட்டிய மேற்குப் பாகிஸ்தான்பற்றிய கருத்துபற்றியே ஐயம் ஏற்படுகிறது.

முன்னர் எடுத்துக் காட்டிய கருத்தைக் கூறியது நிக்சன் அரசுதானா, முஜிபுர் ரகுமானது விடுதலையுடன், கிழக்கு வங்கத்தை இணைக்கும் யோசனை கூறி இருக்கிறது என்று இணைத்துப் பார்க்கவேகூட முடியவில்லை.

மீண்டும் கிழக்கு வங்கம் பற்றி நினைத்துப் பார்ப்பதுகூட, பாகிஸ்தான் ஜனாதிபதி புட்டோவுக்கு, நல்ல பயனைத் தரப் போவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் விடுதலைத் தந்தையான முஜிபுர் ரகிமானது விடுதலையுடன், இந்தப் பிரச்னையை ஒட்டிக் காட்ட விரும்புவதானது, பிரச்னைகளை முடிவுக்குக் கொண்டுவர அவர் விரும்பவில்லை என்பதையே என்றும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கக் கூடியதாகும்.

எனவே, புட்டோவின் பல முரண்பட்ட செயல்களும், பேச்சுக்களும், மீண்டும் ஊடுருவல் சாகசங்களும் உலக சமாதானத்துக்கு உருப்படியான வழிகளைத் தோற்றுவிக்கப் பயன்படாது.

மாறாக, அழிவுத் திசையில் பயணம் நடாத்த, தன்னைத்தானே தயார்படுத்திக் கொள்ளுகிறார் என்றுதான் கருதவேண்டியிருக்கும்.

பாகிஸ்தானை மட்டுமல்ல—தன்னையும் காத்துக் கொள்ளவேண்டிய நல்ல "ஞானம்" அவருக்கிருக்கிறதா என்பதை பொறுத்திருந்துதான், பார்க்க வேண்டும். ஃ

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மௌலானா பஷானி கண்ணீர் சிந்தவைக்கும் சொற்களில் விவரிக்கிறார்: "வங்கதேசத்தில் பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் புரிந்த கொடுங்கோல், நவீன காலத்தில் இட்லரும் முஸோலினியும் சேர்ந்து நடத்திய கொடுங்கோலையும் மிஞ்சி விடுகிறது. நான் எனது கடந்த 35 ஆண்டு கால நீண்ட அரசியல் வாழ்வில், 31 ஆண்டு 10 மாதங்கள் சிறையில் கழித்திருக்கிறேன்......சிறையில் ஆட்சியாளர்கள் என்னை எவ்வளவோ கொடுமைப்படுத்தி உள்ளனர். ஆனால் அவர்கள் மக்களின் வீடுகளுக்குத் தீ வைக்கவில்லை. பாகிஸ்தானியக் கொடுங்கோல் ஆட்சிக்கு வங்க நாட்டிலுள்ள 6200 கிராமங்களில் ஒன்றுகூட தப்ப முடியவில்லை."

பாகிஸ்தானிய இராணுவக் கொலைகாரர்களின் கொடுமைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள 1 கோடி வங்க தேச மக்கள் தங்கள் வீடு வாசல்களை இழந்து இந்தியாவில் அகதிகளாக வந்தனர். இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு பெருந்தொகையான மக்கள் தங்கள் சொந்த அரசினாலேயே விரட்டப்பட்டு மற்றொரு நாட்டிற்கு அகதிகளாக வந்தது உலக வரலாறே இதுவரை கண்டிராத ஒரு சோக நிகழ்ச்சியாகும். ஏற்கெனவே ஏழை நாடான இந்தியாவின்மீது இது தாங்க முடியாத சுமையாக அமைந்தது. அகதிகளின் பராமரிப்பிற்கு நாளொன்றுக்கு இந்திய அரசு 2½ கோடி ரூபாய் செலவிட வேண்டியதாயிற்று!

நாம் உலகத் தலைவர்களுக்கு உருக்கத்தோடு வேண்டுகோள் விட்டோம். இந்த ஒரு கோடி அகதிகள் கௌரவத்தோடும், பாதுகாப்போடும் அவர்களின் தாயகத்திற்குத் திரும்பிச் செல்ல வழிவகை செய்யுங்கள்; வங்க தேசத்தில் நடக்கும் இனக்கொலையை முடிவுக்குக் கொண்டுவந்து, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடு கலந்து பேசி வங்கப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணுங்கள் என்று கூறினோம். நம்முடைய வேண்டுகோள் உலகத் தலைவர்களிடம் செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டது.

உலக மக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டிக் காக்கவேண்டிய ஐ.நா.சபை 7½ கோடி மக்கள் சிந்திய இரத்தத்தையும் கண்ணீரையும் நிறுத்த முன்வரவில்லை. ஐ.நா. அதன் அடிப்படைக் கடமையிலிருந்து தவறிவிட்டது. ஜனநாயகத்தின் பாதுகாவலன் நான்தான் என்று சொல்லிக் கொள்ளும் நாடுகளும்கூட இந்த ஜனநாயகப் படுகொலையை எதிர்த்துக் குரல் கொடுக்காமல், பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரத்துக்கு மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஊக்கம் கொடுத்து வந்தன.

இந்த நேரத்தில்தான் பாகிஸ்தானிய இராணுவ சர்வாதிகாரம், வங்க தேசத்திற்கும் பாகிஸ்தானத்திற்கும் உள்ள பிரச்சினையை, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள பிரச்சினையாக மாற்ற முனைந்து செயல்பட்டது. அதற்கு ஒரே வழி இந்தியா மீது ஆக்ரமிப்பு செய்வதுதான்!

யாகியாகான் ராவல்பிண்டியில் சென்ற நவம்பர் 25ஆம் நாள் "நான் இன்னும் 10 நாட்களில் ராவல்பிண்டியில் இருக்கமாட்டேன், போர் முனையில் போரிட்டுக் கொண்டிருப்பேன்" என்று கொக்கரித்தான். அவன் சொன்னதற்கு ஒரு நாள் முன்னதாகவே டிசம்பர் 3 ஆம் நாள் மாலை 5-00 மணி அளவில் பாகிஸ்தானியப் போர் விமானங்கள் காஷ்மீரிலும், பஞ்சாபிலும் உள்ள நமது விமான தளங்களை எந்த முன்னெச்சரிக்கையும் இன்றி தாக்கின. அந்த நேரத்தில் இந்திராகாந்தி கல்கத்தாவில் 20 இலட்சம் மக்கள் கலந்துகொண்ட பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்! தற்காப்பு அமைச்சர் சகசீவன்ராம் பாட்னாவில் இருக்கிறார். சவான் பம்பாயில் இருக்கிறார். தலைநகரில் முக்கிய தலைவர்கள் இல்லாத நேரத்தில், பாகிஸ்தான் திடீர்த் தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தானின் இராணுவக் கொடுங்கோலாட்சி இந்திய சனநாயகத்தின்மீது போர் தொடுத்து விட்டது. அநீதி நீதியின்மீது போர் தொடுத்துவிட்டது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியதைப்போல் இந்திய-பாகிஸ்தான் போர் இரு நாடுகளுக்கு மிடையே மட்டும் நடந்த போர் அல்ல; இரு வேறுபட்ட தத்துவங்களுக்கிடையே நடந்த போர். போர் தொடங்கிய பதின்மூன்றே நாட்களில் இராணுவ சர்வாதிகாரம் தோற்றுவிட்டது. இந்திய சனநாயகம் வென்றுவிட்டது. இட்லருக்கும் முஸோலினிக்கும் நேர்ந்த கதி யாகியாகானுக்கு ஏற்பட்டது.

ஒரு பக்கத்திலே 55 கோடி மக்களின் ஆதரவு பெற்ற இந்திய சனநாயகம். மற்றொரு பக்கத்தில் மேற்கு பாகிஸ்தானிய ராணுவ சர்வாதிகாரம். இரண்டுக்குமிடையே போர் மூண்டுவிட்டது. இந்தப் போரிலே இந்தியா பெற்ற வெற்றி இராணுவ பலத்தின் வெற்றி மட்டுமல்ல. கொள்கையின் வெற்றியுமாகும். கொடுங்கோலையும், சர்வாதிகாரத்தையும் எதிர்த்து சுதந்திரமும், சனநாயகமும் பெற்ற வெற்றியாகும். அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் உரிமைக் குரலை பீரங்கி முனை கொண்டு அடக்கிவிட முடியாது என்பதற்குச் சான்று. ஓட்டின் மூலம் பெற்ற சனநாயகத் தீர்ப்பை வேட்டின் மூலம் தகர்த்துவிட முடியாது என்ற வரலாற்றுப் பாடத்தை, ராவல்பிண்டி கொடுங்கோலர்களும், அவர்களுக்கு ஆதரவு தந்த அமெரிக்க ஏகாதிபத்தியமும், சீன ஏகாதிபத்தியமும் உணர்ந்து கொள்ளட்டும்.

மிரட்டலைச் செயல்படுத்த பூட்டோ முனைந்தால்.....

"பாகிஸ்தானை தோல்வியுறச் செய்ததற்காகப் பழி வாங்கப் போவதாக பூட்டோ மிரட்டுகிறார்; இம்மிரட்டலைச் செயல்படுத்த பூட்டோ முயன்றால், தற்போது கிடைத்ததைக் காட்டிலும் மோசமான தோல்வி பாகிஸ்தானுக்குக் கிடைக்கும்.

"பூட்டோவின் மிரட்டல் 'வெத்து வேட்டு'தான் என்றாலும், நாம் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது; தமது மிரட்டலைப் பூட்டோ செயல்படுத்தத் துணியாதவாறு எல்லை நெடுகிலும் நமது இராணுவம் விழிப்புடன் இருந்து வர வேண்டும்"

"ஜெனரல் யாகியாகான் செய்த தவற்றையே பூட்டோவும் செய்ய முயன்றால். பாகிஸ்தானுக்கு இராணுவ — பொருளாதார இழப்பு மேற்கொண்டும் ஏற்படும்; அது மட்டுமன்றி அவமானத்தையும் ஏற்க நேரிடும்."

"வங்க தேசத்தை அதன் மக்களிடம் இந்தியா ஒப்படைத்ததிலிருந்தே, இந்தியாவுக்கு நாடு பிடிக்கும் ஆசை நோக்கம் கிடையாது என்பது தெளிவாகும்."

—பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம்.



[38]

வீறிட்டலறினாள் விகாரதேவி!

வெகு நேரத்துக்குப் பிறகு, எள்ளாளச் சோழப் பேரரசர், பூஞ்சோலையை விட்டு, அரண்மனைக்குள் வந்துசேர்ந்ததும், அரண்மனை காவலாளி ஒருவன் ஆண்டிக் கோலத்திலிருந்த ரோகணப் போர் வீரனை, இழுத்துக் கொண்டுவந்து மன்னர் முன் நிறுத்தி, "பிரபு! இவன் தங்களைப் பார்க்க வேண்டும் என்றும், ஏதோ ஒரு ஓலையை நேரிலேயே கொடுக்க வேண்டும் என்றும் பிடிவாதம் பிடித்துக்கொண்டிருக்கிறான்; எவ்வளவு தடுத்தும் போக மறுத்து விட்டான்" என்று கூறிவிட்டு ஒருபுறமாக ஒதுங்கி நின்றான்.

ஆண்டிக் கோலத்திலிருந்தவனை, சில விநாடிகள் வரையில் கூர்ந்து நோக்கிவிட்டு. "கொடு இப்படி அந்த ஓலையை" என்னு கரத்தை நீட்டினார் மன்னர்.

காவலன், வந்திருந்தவனிடமிருந்து ஓலையை வாங்கி மன்னரிடம் சேர்ப்பித்தான். மன்னர் அதனைப் பெற்று இரண்டு வரிகளைப் படித்தார். மன்னரது முகத்தில் கருமை படரத் தொடங்கிவிட்டது. கண்கள் கனலாகக் கனன்றுவிட்டன. இருக்கையிலிருந்து எழுந்து ஆண்டிக் கோலத்திலிருந்தவனின் எதிரில் வந்து நின்றார்.

அடுத்து அவர் என்ன செய்கிறார் என்பது அவருக்கே புரியவில்லை. அனுராதபுரத்தில் ஆட்சி அமைத்து, ராஜரடாவின் மன்னர் என்று பிரகடனப் படுத்திக்கொண்ட கடந்த நாற்பத்து நான்கு ஆண்டுக் காலத்தில், அவர் அப்படித் தன்னை மறந்து போனதில்லை. மனு மன்னர், தன் பிரதிநிதியாக இருக்கத் தக்கவர் எள்ளாளரே என்று எடுத்துக் காட்டிய பெருமைக்குப் பங்கமாக அவர் நடந்து கொண்டு விட்டார்.

மனு மன்னரின் எல்லா பண்புகளும், இயல்புகளும் அமையப் பெற்றவர் என்ற சிறப்பு சீரழியத் தக்க முறையில் செயல்பட்டு விட்டார்.

எள்ளாளச் சோழரா இப்படி? என்று எவரும் எளிதில் கேட்டுவிடத் தக்க வகையில் அமைந்துவிட்டன அந்தச் செயல்கள்!

எதிரே நின்றுகொண்டிருந்தவனை, மன்னர், ஏது, என்ன என்று எதுவுமே கேட்டவில்லை. யார் அந்த ஓலையைக் கொடுத்து அனுப்பினார்கள் என்றும் விசாரிக்கவில்லை.

எதிரே நின்றவனின் கன்னங்களில் மாறி மாறி கை ஓயுமட்டும் அறைந்து விட்டார். மனம் களைப்புறும் வரையும் அடித்துவிட்டார். அருகே இருந்த காவலாளியே பேச்சு. மூச்சற்று அச்சத்தால் கீழே விழுந்துவிட்டான். ஆனால் அவ்வளவு அடிகளையும் வாங்கிக் கொண்ட ரோகண வீரன், பதில் பேசவும் இல்லை; அழவும் இல்லை. அந்த இடத்தை விட்டு அசையவும் இல்லை!

களைப்பு மேலிட்டதே தவிர, ஆத்திரம் குறையவில்லை. அவ்வளவு அடிகளையும் வாங்கிக்கொண்டவுடன் பேரரசருக்கு வியப்பு ஏற்பட்டுவிட்டது. மீண்டும் சென்று இருக்கையிலமர்ந்துகொண்டு மறுபடியும் அந்த ஓலையைப் படித்துப் பார்த்தார். மறுபடியும் அந்த முடங்கலைப் படிக்கவேண்டுமானால், அளவுக்கும் அதிகமான மனோதிடம் வேண்டும். அந்த நிலையிலும் அந்த திடம் அவருக்கு இருந்தது. அதனால்தான் அவர் எள்ளாளச் சோழப் பேரரசரோ!

சோழப் பேரரசே!

இந்த முடங்கலின் அடக்கம் கண்டு நீங்கள் எப்படி ஆவீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. தங்கள் தேவியின் காதல் லீலைகளை நான் கண்ணாலே கண்டு கொண்டிருக்கும்போது, நான் அடையும் வேதனையைவிட, அது குறைவாகத்தானே இருக்கும். உங்கள் சோழதேவியை, இதற்காகத்தானா நீங்கள் தீகவாபிக்கு அனுப்பி வைத்தீர்கள்? இதைப் போன்ற நடவடிக்கையின் மூலம்தானா நீங்கள் ரோகணாவை வெற்றி கொள்ளத் திட்டம் தீட்டியிருக்கிறீர்கள்?

தீசன் மிகவும் இளைஞன். உங்கள் தேவியின் நடுத்தர வயதுக்கு, அவன் சரியான ஈடு ஆக மாட்டானே! வெட்கக்கேடு அரசே! வெட்கக் கேடு! தமிழ்ப்பண்பு இப்படியுமா இருக்கும்?

மானத்தை விற்றுவிட்டு, ஆட்சிபுரிய வேண்டுமா நீங்கள்? இரக்கப்படுகிறேன் அரசே, உங்களுக்காக! வேறென்ன நான் செய்ய முடியும்?

இப்படிக்கு,

ஒரு ரோகணக் குடிமகன்.

முழுதுமாக ஓலையைப் படித்து முடித்துவிட்டு, அந்த இடம் முழுவதும் ஒரு கண்ணோட்டம் விட்டார். ஆண்டியை அழைத்து வந்த காவலன் வெளியேறி இருந்தான். ஆனால் ஓலை எடுத்து வந்தவன், முன்னிலும் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான்,

அமர்ந்த இடத்திலிருந்தே, அவனை மீண்டும் கூர்ந்து கவனித்தார். இதயத்தின் அடித்தளத்திலிருந்து பெருமூச்சு ஒன்று எழுந்து அடங்கியது. கண்களின் ஓரங்களில் நீர் முட்டி நின்றது.

உடலும் உயிருமாய் இருந்துகொண்டிருக்கும் தனது மனைவியைப்பற்றி, இதுபோன்ற செய்திகளைக் கேட்கும் எந்த ஒருவனும், தன்னிலை மறந்து சில செயல்களை மேற்கொண்டு விடுவதென்பது இயல்பான ஒன்றுதான்! அவன் எவ்வளவு உயரத்திலிருந்தாலும், செய்தியினைச் செவிமடுக்கின்ற அந்த ஒரு விநாடியில், கீழான எண்ணங்களைக்கூட கொண்டு



விடத்தான் செய்கிறான். காரணம், அந்தச் செய்தியின் தன்மை அப்படி!

அதுபோலத்தான் மிக உயர்ந்த அந்தஸ்த்திலிருந்த எள்ளாளரும் ஒரு விநாடி, தன்னிலை மறந்து ரோகண வீரனை அடித்துத் துன்புறுத்தி விட்டார். மன்னர் என்ற அவரது அந்தஸ்த்துக்கு அது கீழான செயல்தான்! அதை விடக் கீழானதாக அல்லவா அவன் செய்தி கொண்டு வந்திருந்தான்!

மிகக் குறுகிய நேரத்தில் மன்னர், மீண்டும் மன்னர் என்ற நிலைக்குத் திரும்பிவிட்டார்.

ஓலையின்மீது மறுபடியும் ஒரு கண்ணோட்டம் செலுத்திவிட்டு, அவருக்கே உரிய முறையில் கண் இமைகளைச் செறுகி வைத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கினார். அவரது முகத்தில் இப்போது சினம் தெரியவில்லை. மெள்ளிய புன்னகை ரேகைகள் குறுக்கிட்டுக் கொண்டிருந்தன.

"நீ யார்?" என்றார் எதிரே நின்றவனைப் பார்த்து.

"நான் ரோஹணவைச் சேர்ந்த ஒரு பரதேசி. மாவலிக் கங்கை ஆற்றைக் கடக்க நான், கரையில் நின்று கொண்டிருந்தபோது இந்த ஓலை அங்கே கீழே கிடந்தது. படித்துப் பார்த்தேன். யார் கண்ணிலும் பட்டுவிடக் கூடாதே என்பதற்காக, நானே எடுத்துக்கொண்டு வந்து சேர்த்தேன். அதற்குத்தான் பரிசு கொடுத்துவிட்டீர்கள்!" என்றான் அந்த வீரன்.

மறுபடியும் அவனைக் கூர்ந்து கவனித்துவிட்டு, "நீ உண்மையிலேயே ஒரு ஆண்டிதானா?" என்றார்.

"இருபதாண்டுக் காலமாக நான் இப்படித்தான் அரசே இருக்கிறேன்!"

"ஏன், உழைத்துச் சாப்பிட விருப்பமில்லையா உனக்கு?"

"நான் உழைக்கத் தயாராகத்தான் அரசே இருந்தேன். எவரும் என் உழைப்புக்கு உரிய மதிப்புக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை."

"ஓ, அப்படியா! ஏன், நந்திமித்திரன் கூடவா மதிக்காமல் இருந்துவிட்டான்?" என்று கேட்டுக் கொண்டே, அவனுக்கு அருகில் வந்து மீண்டும் நின்றுகொண்டார்!

நந்திமித்திரனின் பெயரை மன்னர் உச்சரித்ததும், ஒருகணம் அவன் அதிர்ந்துவிட்டான். முகத்தில்கூட கருமை படர்ந்து விகாரப்படுத்திவிட்டது. மன்னர் அதனைக் கவனிக்கத் தவறவில்லை.

"நந்திமித்திரனா? ரோகணாவில் அப்படி ஒருவனா? நான் கேள்விப்பட்டதே இல்லையே!" என்றான் துணிவாக.

மன்னருக்கு மறுபடியும் ஆத்திரம் வந்தாலும், அவர் மிகவும் நிதானத்துடன் நடந்து கொண்டார். "நீ கேள்விப்பட்டிருக்க முடியாது என்பதை நான் நம்புகிறேன். ஏனென்றால், நீ எப்போதும் அவனுக்கு அருகேயே இருந்து ஊழியம் புரிந்துகொண்டிருக்கிறாய் அல்லவா, அதனால்! முட்டாளே, உண்மையை ஒளிக்காமல் சொல்லிவிடு! உயிர் பிழைத்துக்கொள்வாய். யார் இந்த ஓலையைக் கொடுத்தனுப்பினார்கள்? நந்திமித்திரன்தானே!" என்றார்.

"இல்லை அரசே! யாரும் என்னிடம் கொடுக்கவில்லை. ஆற்றங்கரையில்தான் கிடந்தது இது."

"நான் நம்பவேண்டுமா இந்தக்கதையை! உயிரின் மீது உனக்கு ஆசை இருந்தால், நீ திரும்பிச் சென்று உனது மனைவி மக்களைக் காண வேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தால், உண்மையைச் சொல்லிவிடு!

"எனக்குத் தெரிந்தவரையில் நான் சொல்வதுதான் உண்மை அரசே!"

"ஓ, சரியான ஆளைத்தான் நந்திமித்திரன் இந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறான். பாராட்டுகிறேன் அவனை. என்னுடைய பாராட்டுக்களை அவனிடம் சென்று தெரிவித்துவிடு! போ! ஊம், போய்விடு!" என்று அவனை விரட்டினார்.

உடனேயே பணியாளை அழைக்கும் மணியை அடித்துவிட்டு அமர்ந்தார். பணியாள் வந்ததும் அமைச்சர் முத்துமுடியையும், தளபதி தியாகராயரையும் உடனே வரச் சொல்லும்படிக் கூறிவிட்டு, மீண்டும் சிந்தனையில் மூழ்கினார்.

ஃ ஃ ஃ

மீண்டும் கமணனை, மகாகாமாவுக்கு அழைப்பது என்ற திட்டத்தை வகுத்துக்கொண்டு அனைவரும் சென்ற பின், தனித்து விடப்பட்டிருந்த விகாரதேவியின் கற்பனைகள் சிறகு முளைத்துப் பறக்கத்தொடங்கிவிட்டன.

தீகவாபியில், தனியாக வந்திருக்கும் விஜிதபுரக் கோட்டைத் தலைவன் வீரபாகுவை, எப்படியாவது கைது செய்துவிட முடியுமென்றால், நடைபெறப் போகும் போரில், வெற்றியைத் தனது பக்கம் சுலபமாக இழுத்துக்கொண்டு வந்துவிட முடியுமே என்கிற வகையில் அவளது சிந்தனைகள் சென்றுகொண்டிருந்தன. அதேபோல், அவனது காதலைப் பெருமலேயே இதுவரையில் காலம் கழித்துவிட்டது குறித்தும்,

தானே நேரில் சென்று சந்திக்க முயன்றும், சந்திக்கக் கூட விரும்பாமல் அவன் இருந்துவிட்டது குறித்தும் எண்ணங்கள் குறுக்கிட்டன.

வீரபாகுவுடன் காதல் விளையாட்டு என்பது பற்றிய எண்ணம் பற்றிக்கொண்டவுடன், விகார தேவியின் எண்ணங்கள் அலைக்கழியத் தொடங்கி விட்டன.

காதலைப் பெற்றுக் கைது செய்வதா? கைது செய்து காதலைப் பெறுவதா என்பதில் அவள் முழுதாகக் குழம்பிப் போனுள். ஒரு முடிவை எட்ட முடியாமல் அலமந்தாள்.

காதல் தீ ஒருவரைப் பற்றிக்கொண்டுவிட்டால், தீய்த்துக் கருக்காமல், இலேசில் விட்டுவிடுமா என்ன? அதுவும் நெடுங்காலமாகக் கனன்று கொண்டிருக்கும் தீயாயிற்றே அது! தீகவாபிக்கே சென்று அவனைச் சந்திக்கலாமா? என்று ஒருமுறை எண்ணினுள். தாய் என்றும்கூடப் பாராமல், தன்னைக் கைதுசெய்ய முன் வந்தானே அந்தப் பாவி! தான் கல்யாணிக்குச் சென்றுவிடுவதாகக் கூறியதால்தானே, தன்னை கைது செய்யாமல் விட்டான்! அத்தகைய கொடுமனம் படைத்தவனது இருப்பிடம் சென்று, தான் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்குமா? என்பதில் ஒரு தயக்கம் ஏற்பட்டது அவளுக்கு. எது எப்படியானுலும், இந்த முறை அவனது மார்பில் புரளாமல், ஏமாந்துவிடக்கூடாது என்று மட்டும் தீர்மானம் செய்துகொண்டாள். அதற்குரிய வழிகளைக் கண்டுபிடிப்பதில் மூழ்கிக் கொண்டிருந்தாள் கடந்த ஒரு கிழமைகளாக!

தங்கள் அரசியிடம் காணப்பட்ட அந்த பரபரப்பைக் கண்டு, அரண்மனை ஊழியர்கள் குசுகுசுக்கத் தொடங்கினர். முதலமைச்சர் காசியபருக்குக்கூட அது ஒரு சங்கடமான நிலைமையாகத்தான்பட்டது. எதிர்பார்த்ததுபோல கமணன் அரண்மனைக்கு வந்து சேரவில்லை. அழைக்கச் சென்ற சூரநிமிலனிட மிருந்தும் தகவல் இல்லை. தீசனைப்பற்றிய செய்தி களும் நீறுபூத்த நெருப்பாக அடங்கி இருந்தன. சோழதேவியும், வீரபாகுவும், ராஜரடாவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி மட்டுமே கிடைத்தது காசியபருக்கு.

அந்தச் செய்தியுடன் சென்று, அரசியைச் சந்திக்கலாம் என்று போனவர், விகாரதேவியையும், அப்போதைய அவளது அலங்காரத்தையும் கண்டு அதிர்ச்சியடைந்து விட்டார்!

பேரழகுப் பெட்டகமாக, சர்வாலங்காரத் தேவதையாக அப்போது காணப்பட்டாள் ரோகண அரசி! காசியபருக்கே ஒரு விஞடி சபலம் ஏற்பட்டு விட்டது! தன்னைச் சமாளித்துக்கொண்டார்.

எதிர்பாராமல் அந்த நேரத்தில் அங்கு வந்த காசியபரைக் கண்டு விகாரதேவி "என்ன அமைச்சரே! என்ருள். தடுமாற்றம் நீங்கிய முதலமைச்சர், "ஒன்றுமில்லை தேவி! சோழ அரசியும், வீரபாகுவும் ராஜரடாவுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிருர்களாம். இன்றிரவு, நமது எல்லையிலுள்ள சாவடியிலேயே தான் தங்கி இருக்கப் போகிருர்களாம்!" என்ருர்.

"அப்படியா அமைச்சரே! தித்திக்கும் சேதியைத் தான் திரட்டி வந்திருக்கிறீர்கள். நல்லது. ஏன் அமைச்சரே, நாம் நம் படையுடன் சென்று அவர்கள் இருவரையும் இங்கேயே கைது செய்துவிட்டால்

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவோ நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் : சென்னை-8

சுவைத்ததைச் சொல்கிறோம்

பாட்டொன்று வெளிவரவே
பாவலராம் காமுஷெரிப்
ஏட்டிற்கு தகுந்தபடி
ஏமாற்றம் செய்ததினை
போட்டுடைத்த பொடியன்தன்
பெருங்குரலைக் கேட்டப்பின்
தீட்டுதற்கு பிறகவிஞர்
திரள்வாரோ? பார்த்திடுவோம்!

—கருமலைத் தமிழாழன், சேலம்

கடந்த கிழமை "காஞ்சி"யின் முகப்புக் கவிதை கண்டேன். பூத்தது புரட்சிப் பூ மட்டுமன்று—புரட்சிக் கவிதையும்கூட! கவிஞர் வேங்கடபதியின் கவிதைப் பணி வெல்க!

"காஞ்சி" துணையாசிரியர் திருவாரூர் முத்துராமன் அவர்களைக் கட்டுரை ஆசிரியராக மட்டுமல்லாமல் சிறந்த 'கவிஞராக'வும் காண விழைகின்றோம். குறிஞ்சி மலரைக் காண்பதுபோல் அல்லாமல், அன்னாரின் கவிதையையும் "காஞ்சி"யில் எதிர்பார்க்கின்றோம்.

—மணிவேந்தன், காஞ்சி

என்ன?" என்று ஒரு வினாவைப் போட்டாள் விகாரதேவி.

"அது எண்ணிப் பார்க்க எளிதாக இருக்கலாம் தேவி! செயல்படுவது மிகவும் கடுமையான விளைவுக்குரியதாக ஆகிவிடக்கூடும்" என்றார் காசியபர்.

"ஏன் அமைச்சரே அப்படிக் கருதுகிறீர்கள்? நம் எதிரி நாட்டினர்—அதுவும் போர்ச் சூழல் இருந்துகொண்டிருக்கும் நேரம் இது, இந்த சந்தர்ப்பத்தில் நமது எல்லைப் பகுதியில் அவர்கள் வந்திருப்பது குற்றம்தானே! கைது செய்வது தவறேதும் இல்லையே!"

"உங்கள் விளக்கம் அழகாக இருக்கிறது தேவி! நமது அமைச்சர் பெருமக்கள் இந்த விளக்கத்தை ஏற்கமாட்டார்கள். அத்துடன் இந்தக் காரியத்தை நாம் செய்துவிட்டால், அடுத்து உடனே நடைபெறத் தொடங்கிவிடும் போரின்போது, கல்யாணியின் ஆதரவையும், அது போன்ற சிற்றரசுகளின் ஆதரவையும், நமது நாட்டு மக்களின் ஆதரவையும் கூட நாம் இழந்துவிடத் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் இருமுனைகளிலிருந்து நாம் தாக்கப்படுவோம். அனுராதபுரத்தின் தாக்குதல்களையும், தீகவாபியின் தாக்குதலையும் நாம் இப்போது ஏக காலத்தில் எதிர்த்து நிற்க முடிந்தவர்களாகவா இருக்கிறோம்! நம்புகிறீர்களா அப்படி!" என்றார் வருத்தத்தோடு.

"நான் ஒரு யோசனையாகத்தான் அதனைச் சொன்னேன். உத்திரவு அல்ல அமைச்சரே! கமணன் விஷயம் ஏதாவது புலப்பட்டதா!" என்றாள் தேவி

"இல்லை தேவி! எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்!" என்றார் காசியபர்.

"காலத்துக்கும் எனக்குக் கவலையாக இருப்பவன் கமணன்தான்! துஷ்ட கமணன் என்று அவனது தந்தை, பொருத்தமாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்!"—என்று கூறிவிட்டு, தனக்குத்தானே ஒரு முறை நோட்டம்விட்டுக்கொண்டு, "சரி அமைச்சரே! கமணன் விஷயமாக துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டு, அந்தப்புரத்துக்குள் நுழைந்தாள்.

அவளது பின்னழகைக் கண்டு ரசித்தபடியே சில வினாடிகள் நின்றுவிட்டு, காசியபர் திரும்பினார்.

அவர் போனதும் மறுபடியும் விகாரதேவி, அங்கிருந்து வெளி வந்து, நீண்ட ஒரு அங்கியை எடுத்துப் போர்த்துக்கொண்டு, பரபரப்புடன் அரண்மனையை விட்டு வெளியேறினாள். அவளது மனத்தில் வீரபாகுவின் கட்டுடல் காட்சிகள் பலவற்றைப் படைத்துக் கொண்டிருந்தன.

ஃ ஃ ஃ

பயணிகள் விடுதியின் முகப்பில், தேர் நிறுத்தப்பட்டிருந்தது. தேரில் ஒரு பக்கத்தில் தேரோட்டி சாய்ந்து, உறங்கிக் கொண்டிருந்தான். அங்கே வந்து நின்று கவனித்தாள் விகாரதேவி.

விடுதியின் வாயில் முகப்பில் வந்து நின்றாள். கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. பின்பக்கமாக ஒரு சுற்றுச் சுற்றி வந்தாள். எல்லாக் கதவுகளுமே உட்புறம் தாழிடப்பட்டிருந்தன. அவளுக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்துவிட்டது.

வீரபாகுவைச் சந்திக்கும் அருமையான வாய்ப்பு நழுவிவிடுமோ என்று கவலை ஏற்பட்டுவிட்டது அவளுக்கு. கதவைத் தட்டி எழுப்பலாமா? என்று நினைத்தாள். வீரபாகுவோ, அல்லது விடுதி காக்கும் கிழவியோ வருவதற்குப் பதில், சோழதேவியே எழுந்து வந்துவிட்டால்?

நிலைமையில் ஒரு தெளிவு ஏற்படவில்லை அவளுக்கு. எங்கும் இருள் படிந்து இருந்தாலும் அரை வட்ட நிலவின் ஆட்சியும் கொஞ்சம் இருந்து கொண்டிருந்தது.

ஏக்கப் பெருமூச்சுக்களை உகுத்து விட்டுவிட்டு, விடுதியின் எதிரேயுள்ள ஒரு கமுகு மரத்தின்மேல் வந்து சாய்ந்துகொண்டு நின்று, விடுதியின் கதவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஒரு நாழிகைப் பொழுது அப்படியே கழிந்து போயிருக்கும்.

விகாரதேவி சாய்ந்து கொண்டிருந்த மரத்தின் பின்னாலிருந்து இரண்டு கரங்கள், மரத்துடன் சேர்த்து அவளைக் கோர்த்துக் கொண்டன. எதிர்பாராத அந்த நிகழ்ச்சியால் விகாரதேவி ஆ என்று அலறிவிட்டாள்.

ஆராய்ச்சிக் கட்டுரை :

வள்ளுவர் காட்டும் காப்பு!

காப்பு என்ற சொல்லைக் கண்டவுடனேயே நமக்கு எத்தனையோ வகையான பொருள்கள் தோன்றுதல் கூடும். ஆனால் வள்ளுவப் பெருந்தகை இக் காப்பு என்னும் சொல்லைத் தனது திருக்குறளில் நான்கே இடங்களில் எடுத்தாளுகின்றார். அது காப்பு, காவல், காத்தல் என்று விரியும் எனினும் மூன்றும் ஒரே பொருளுள்ளதே. இச்சொல் வாழ்க்கைத் துணைநலம், நட்பு, உழவு என்னும் மூன்றே அதிகாரங்களில் அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் எடுத்தாளப்பட்டுள்ளது. இதனை இன்னும் விரிக்கின் கற்பைக் காத்தல், நட்பைக் காத்தல், பயிரைக் காத்தல் என்று கூறலாம். இம்மூன்றும் பாதுகாப்புற்றால் உலகம் காக்கப்படும் என்பது வள்ளுவரது நம்பிக்கை போலும். எனவே தான் காக்க வேண்டியவை எத்துணையோ இருப்பினும் இம்மூன்றை மட்டும் 'காப்பு' என்னும் சொல்லில் அடக்கினர்.

சிறைகாக்கும் காப்பெவன்
செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

என்னும் குறளில் இக்காப்பு என்னும் சொல் இருமுறை அடுக்கப்பட்டுள்ளது. முதற்காப்பு பிறர் ஒன்றைக் காப்பதாகும். இரண்டாவது காப்பு ஒன்று தன்வினைத் தானே காத்தலாக்கும்.

இக்குறளின் பொருள் பெண்டிரை அவரது கணவர் அவரது கற்புக் கெடாதவாறு சிறை முதலிய கட்டுக் காவல்களால் காப்பதனால் பயனென்ன? ஒன்றுமில்லை. அதனால் அப்பெண்டிரே தம் கற்பினை தமது நிறைவுடைமையால் காத்தல் வேண்டும். அதுவே தலையானதாகும் என்பதாகும்.

ஈண்டு சிறை என்பதனை மதிலும் வாயில் காவலும் முதலாயின என்றும் நிறை என்பதனை நெஞ்சைக் கற்பு நெறியில் நிலை நிறுத்தல் என்றும் கூறுவர் பரிமேலழகர். காவலிரண்டிலும் நிறை காவல் இல்வழி ஏனைச் சிறை காவலாற் பயனில்லை, என்றும் தற்காத்தலின் மேன்மையும் இதனால் வலியுறுத்தப்பட்டது.

ஒழுக்கம் விழுப்பத்தை மக்களுயிர்க்குத் தருதலால் அதனை அவர்கள் உயிரினும் மேலானதாக ஓம்புதல் வேண்டும் என்பார் வள்ளுவர். ஒழுக்கம் குன்றுமேல் உயிருக்கும் இறுதி நேரும்.

சமுதாய அமைப்பில் ஒழுக்கம் என்பது ஆடவர்கள் பிறன் மனையை நயவாமையும் கள்ளுண்ணாமை முதலிய தீயநெறிகளில் செல்லாமையுமே பெரிதும் தலையாயதாகக் கருதப்படுகிறது.

பெண்கள் தம் கற்பு நெறியில் திறம்பாமையும் கொண்டானைப் பேணுதல் முதலியனவும் பெரிதும் போற்றப்படுவனவாகும்.

பேராசிரியர் மு. உலகநாதன்

எனவே இவற்றை இருபாலாரும் காக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் எனினும் பெண்கள் கற்பு நெறியில் தவறுதல் மிகவும் இழிவானதாகவும் வெறுக்கத் தக்கதாகவும் சமுதாயத்திற்குக் கேடு பயப்பதாகவும் கருதப்படுகிறது.

கற்பு நெறியைப் பெண்கள் இழப்பதற்குப் பெரிதும் காரணமாக ஆடவர்களே இருப்பதால் அவர்கள் பெண்மையைப் பெரிதும் மதித்துக் காத்தல் வேண்டும் என்று இன்றைய கல்வி முறைகளும், சமுதாய விதி முறைகளும் அதனை வலியுறுத்தி நிற்கிறது. இவ்வாறு பெண்ணின் பெண்மையை எந்த நாடு பெரிதும் பேணிப் பாதுகாக்கிறதோ அந்த நாடு நயத்தக்க தனி நாகரிகம் பொருந்திய நாடாகக் கருதப்படும். பண்பாட்டில் தலைசிறந்த நாடாக வைத்தெண்ணப்படும். இவ்வாறு நாடும், சமுதாயமும் பெண்ணின் பெண்மையை மதித்துக் காத்தலும், மதில், சிறை முதலியவற்றால் காத்தலும் ஒருவாறு சமுதாய ஒழுக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் பாதுகாவலாக அமைகின்றன. இது பிறரால் காக்கப்படும் காப்பாகும்.

ஆனால் ஒரு பெண்ணே கொண்டானைத் தவிர பிற ஆடவரை மனத்தால் தீண்டுதல் இல்லை என்ற நிலையினை வளர்த்துக் கொள்வாள் எனில் அதுவே தலைசிறந்த அறமாகவும் கற்பாகவும் கருதப்படுகிறது. அது தன்னைத் தானே காத்துக் கொள்ளும் காப்பாகும்.

எப்படியோ பெண்ணின் கற்புக் காக்கப்படுதல் வேண்டும். அது காக்கப்பட்டால் அமைதி தவழுகிறது. அன்பு முகிழ்க்கிறது. அறம் வளர்கிறது. பண்பு வளர்கிறது. சமுதாய நலம் காக்கப்படுகிறது.

அடுத்துக் காக்கப்பட வேண்டியதில் மிக முக்கியமானது நட்பு என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. இன்று உலகில் ஒரு நாடு ஒரு நாட்டோடு நட்புப் பூணாமல் மோதிக் கொள்வதால் ஏற்படும் கொலைகளையும் கொள்ளைகளையும் விளைவுகளையும் அறிகிறோம். போர் மூளுமானால் எத்தனை உயிர்கள் எவ்வாறு உடைமைகள் நாசமாகின்றன. எங்கு பார்த்தாலும் 'குய்யோ முறையோ' என்னும் அவல ஓலம் கேட்கிறது. இதனைக் காணுகின்ற சான்றோர்கள் உலகம் அமைதியில் திளைக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். அதற்கு உலக ஒருமைப்பாடு வேண்டுமென்று கருதுகின்றனர். கருத்துக்கள் மோதலாம். ஆனால் கம்புகளும் வம்புகளும் மோதக் கூடாது என்று கூறுகின்றனர்.

ஒருவருக் கொருவர் நட்புக் கொண்டால் உள்ளத்தில் நட்புணர்ச்சியை வளர்த்துக் கொண்டால் எங்கும் அமைதி சூழுவதைக் காணலாம். இன்பம் தவழ்வதைக் காணலாம்.

மற்றைய உணர்வுகள் எல்லாம் சாதியின் அடிப்படையில் சமயத்தின் அடிப்படையில் ஏற்படுவனவாகும். ஆனால் இந்த நட்பு ஒன்றுதான் சாதிகளைக் கடந்து, சமயத்தைக் கடந்து ஆண் பெண் என்ற பாகுபாட்டைக் கடந்து உயர்திணை அஃறிணை என்ற திணை வேறுபாட்டைக் கடந்து நாடுகள் என்ற தூரத்தை

யும், காலத்தையும் கடந்து உள்ளத்தில் ஒற்றுமையும் அன்பையும் முழக்கச் செய்கின்றன.

வள்ளுவப் பெருந்தகை அரசன் யாரிடத்தில் நட்புக் கோட வேண்டும் என்று கூறுகின்றபோது 'நட்பு' என்னும் அதிகாரத்து முதற் குறளில் அதனைப்போல் சிறந்த காப்பு இல்லை என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு"

அரசன் தன்னையும் தன்னுட்டையும் துன்பம் சூழாமல் காத்துக் கொள்ளுதற்குச் செய்ய வேண்டிய பாதுகாப்புக்கள் எத்தனையோ உள. இருப்பினும் அவன் தன்னைச் சூழ்ந்தாரிடத்தும் பிறரிடத்தும் நட்புக் கொள்வானெனில் அது அவனுக்குச் சிறந்ததோர் அரணுக அமைகிறது. அவனுக்குப் பகைத் துன்பங்கள் வரினும் அந்நட்பே அவனுக்குக் கிடைத்தற்கரிய காவலாக அமையும்என்று கூறுகின்ருர்.

இந்நட்பினைப் பரிமேலழகர் இயற்கை நட்பு செயற்கை நட்பு என இருவகைப்படும் என்பர். இயற்கை நட்பாவது பிறப்பு முறையான் வருவது. செயற்கை நட்பாவது தேய முறையான் வருவது. பிறப்பு முறையால் வருவது சுற்றம் தழுவுதலால் தோன்றுவது' செயற்கை முதலியவாவன பகையிடையிட்ட போது 'துணைவலி' முதலாய உதவியான் வருவது.

எனவே நல்வினை முதலாய செய்தற்கு நட்புப் போலக் காக்கும் காவல்கள் பிறிதில்லை என்பது பெறப்படுகிறது. இயற்கைநட்போ செயற்கை நட்போ அது தனி மனிதனுக்கும் சரி அரசனுக்கும் சரி சிறந்த காவலாக இருக்கிறது. அதில்தான் செய்யும் வினைக்கு நட்புப்போல் யாவுள காப்பு? என்று வினுவினைக் கேட்கின்றார் வள்ளுவப் பெருமான்.

வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரத்து பெண்ணின் கற்புக்குரிய காவலையும் நட்பு என்னும் அதிகாரத்து அரசன் தன்னையும் நாட்டையும் நட்பு என்னும் காவல் மூலம் காத்துக் கொளளல் வேண்டும் என்னும் உபாயத்தையும் வலியுறுத்திக் கூறினர்.

அதேபோல உழவு என்னும் அதிகாரத்தில் உழு தொழிலின் சிறப்பினை பல்வேறு கோணங்களில் நின்று தலையாயது உழவே என்று வற்புறுத்திக் கூறுகின்ருர் வள்ளுவர். அதனில் அவ்வுழவுத் தொழில் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும் என்பதனையும் கூறுகின்ருர்.

வீடாக இருந்தாலும் நாடாக இருந்தாலும் ஒரு காப்புக்குள் அடங்குதல் வேண்டும். அக்காப்பு இல்லையேல் அவை பாழ்பட்டுப் போம்.

அதேபோல் உழவுத் தொழிலும் ஒரு காப்புக்குள் அடங்குதல் வேண்டும். அவ்வாறு அது காக்கப்பட்டால்தான் உலகம் காக்கப்படும்.

"ஏரினும் நன்ருல் எருவிடுதல்
கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்னும் குறளில் காப்பின் அவசியத்தையும் சிறப்பையும் வலியுறுத்திக் கூறுகின்ருர்.

பயிருக்கு ஆழ உழுதல் நன்று. அதனினும் அதற்கு எருவிடுதல் நன்று. அதனினும் நன்று களை கட்டல், நீர் விடுதல் முதலாயின. அதனினும் நன்று அப்பயிரை வேலி முதலாயின இட்டுக் காவல் செய்தல் என்கின்ருர்.

"காத்தல் என்பது பட்டி மாடு முதலாயினவற்ருல் அழிவெய்தாமல் காவல் செய்தல்" என்பார் பரிமேலழகர். காளிங்கர் "பயிர்ப் பயன் பழுதுபடாமல் முன்னுறக் கொண்டே கடிந்து காப்பதோர் காப்பு" என்று கூறுவர்.

இன்றைய அறிவியல் முறையில் பயிர்களைப் பல்வேறு விதமாகக் காத்தல் செய்வர். 1. மாடு, பன்றி, குரங்கு, யானை போன்ற மிருகங்களால் அழிவுவராமல் காத்தல். 2. திருடர்கள், பகைவர்கள் முதலானவர்களால் பறிபோகாமல் காத்தல். 3. காற்று, மழை, நெருப்பு முதலியவற்ருல் சேதமுருமல் காத்தல். 4. புழு, பூச்சி, வெட்டுக்கிளி, கொட்டெலி பறவைகள் போன்றவற்ருல் கேடுருமல் காத்தல். 5. நோய், சோகை வளர்ச்சியின்மை முதலியன வாராமல் மருந்தடித்துக் காத்தல் என்று திமைகளில் இருந்து காத்தலும். 6. உரம், நீர் முதலியவற்றை உரிய காலத்தில் வளமுறத் தந்து காத்தலும், என்று இன்னும் இது போன்று பலவகையால் காத்தலும் உழவின் சிறப்பினை வளப்படுத்திப் பெருமைப்படுத்தும். எனவே பயிர் களை இவ்வாறு காப்பதனுல் பசுமை குலுங்குகின்றது. பசுமை குலுங்க வாழ்வு பசுமையுறுகிறது.

உழவின் காப்பு உலகத்தில் ஒழுக்கத்தையும், பகைமை மாய்க்கும் நட்பையும் வளர்த்து அதனடிப்படையில் மனித சமுதாயத்தையே காக்கிறது. கற்பின்காப்பு, நட்பின் காப்பு, உழவின் காப்பு ஆகிய மூன்று காப்பினுல் உலகம் முழுமை பெருகிறது. காக்கப்படுகிறது. வளர்க வள்ளுவர்கூறும் "காப்பு" *

உரைகல்

பாண்டிய நாட்டுப் பாவை

ஆசிரியர்:- மு. பி. பாலசுப்பிரமணியன், [மணிவேந்தன்] எம். ஏ.,

விலை:- ரூ. 1-50

கிடைக்குமிடம்: முத்து நிலையம், அய்யாபுரம் (வழி)இலஞ்சி, தென்காசிவட்டம்

எட்டுவகையான மலர்களைக் கொண்டு எழிலோடு கட்டப் பெற்ற கதை மாலையே 'பாண்டிய நாட்டுப் பாவை'. மதிப்புரை தந்துள்ள திரு. மா. கி. தசரதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி ஆசிரியர் ஒவ்வொரு கதையிலும் தம் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுக்கு வடிவம் கொடுக்கும் அரிய கலையில் வல்லவராகவே உள்ளார்.

'பாண்டிய நாட்டுப் பாவை'யில் தொடங்கி 'அன்னையின் ஆசையில்' நிறைவுறும் இத்தொகுப்பில் 'அணையா விளக்கின்' அழகையும், 'இருண்ட வாழ்வின்' கொடுமையையும், 'சந்தேகப் புயலின்' அழிவையும், 'பணத் திமிரின்' இழிவையும், 'திருந்திய நெஞ்சம்' தரும் தெளிவையும், 'தியாகச் சுடரின்' சிறப்பையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒவ்வொரு கதையிலும், ஒவ்வொரு வகையான சுவையை நுகரும் வண்ணம் கதைகளைத் தொகுத்திருப்பது கவிஞர் - மணிவேந்தன் அவர்களின் கைவண்ணத்தைக் காட்டுகிறது.

மொத்தத்தில் கதைகள் எல்லாம் மணிகள்! ஆசிரியரோ, எழுத்தால் நம்மை ஆளும் வேந்தன்!!

— அரிமதி தென்னகன்.

மன்னிப்பு

இரவு மணி ஒன்பதைத் தாண்டி நேரமாகிவிட்டது குழந்தை நந்தினி. படிப்பறையில்உட்கார்ந்து இன்னமும் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறாள். பக்கத்து அறையில் அம்மாவும் அப்பாவும் எது பற்றியோ பேசிக்கொண்டிருப்பது கேட்கிறது. ஆனால் தெளிவாகக் கேட்கவில்லை. ‘அப்பாவுக்கு நாளை காலையில் கோர்ட்டில் ‘ ஈரங்கி’. அதுபற்றித்தான் பேசிக்கொண்டிருக்கவேண்டும்.

திடுமென்று, “நீங்கதான் விட்டுக் கொடுத்திடுங்களேன்!” என்கிறாள் அம்மா.

“அது விஜயா... தவறு செய்திட்டாக்கூடப் பரவாயில்லே...அதை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுட்டா விட்டுடலாம். அதில்லாமெ செய்யறதை செய்திட்டு மேற்கொண்டு நடவடிக்கைன்னு எப்படி விட்டுக் கொடுப்பது?” என்று அம்மாவுக்குப் பதில் சொல்கிறார் அப்பா.

குழந்தைக்கு ஒன்றும் புரியவில்லை. என்றாலும், ‘தவறு செய்திட்டாக்கூடப் பரவாயில்லே...... அதை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுட்டா விட்டுடலாம்!’ என்று அப்பா சொன்ன வார்த்தைகள் குழந்தையின் நெஞ்சில் நிலைத்து விடுகின்றன.

‘அப்போ... ‘மன்னிப்பு’ங்கற ஒரு வார்த்தைக்கு அத்தனைப் பெரிய சக்தியா?’—குழந்தைக்கு வியப்புத் தாளவில்லை. இருந்தாலும், இந்த சிந்தனையை அறுத்துக் கொண்டு பாடத்தில் கவனத்தை ஓட்டுகிறது குழந்தை.

சற்றைக்கெல்லாம் தூக்கம் கண்ணைச் சுழற்றுகிறது. புத்தகத்தை மூடி வைத்து விட்டு குழந்தை படுக்கைக்கு வருகிறது. தூக்கத்திலும் கூட, தவறு செய்திட்டா கூடப் பரவாயில்லே.........அதை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுட்டா விட்டுடலாம்!’ என்ற வார்த்தைகள் குழந்தையில் காதில் எதிரொலிக்கிறது.

பொழுது புலர்ந்து, தூரத்து ஆலயம் ஒன்றில் ஐந்துமணி அடிக்கும். சப்தம் கேட்டதும் குழந்தை விழித்துக் கொண்டு பார்க்கிறாள். அடுத்த அறையில் சலசலப்புக் கேட்கிறது. ‘கோர்ட்டுக்குப் போவதற்காக வேண்டி அப்பா சீக்கிரமே விழித்துவிட்டார் போலிருக்கிறது’ என்று யூகித்துக்கொண்டுகுழந்தை ‘பாத்ரூமு’க்கு ஓடுகிறாள். உள்ளே அம்மா குளித்துக் கொண்டிருக்கிறாள். குளித்துவிட்டு வரும்வரை காத்திருக்கக் குழந்தைக்குப்பிடிக்கவில்லை—பொறுமையில்லை.

உடனே, வீட்டு வாசலுக்கு எதிர்த்தாற்போலிருக்கிற பொது குழாயடி’க்கு ஓடுகிறாள் குழந்தை. குழாயடியில் நல்ல கூட்டம்தான் என்றாலும், எப்படியோ, குழந்தை முகம் அலம்பிவிட்டு அறைக்கு வருகிறாள்.

விளக்குக் கம்பத்தைத் தாண்டும் தருணம். திடீரென்று விழுந்து உடைந்தது ஒரு மண் தோண்டி. பாட்டியின் தோண்டியை உடைத்துவிட்டு வீட்டுக்குள் ஓடிவிட்டாள், பக்கத்துவீட்டு ராதா. குழந்தை நந்தினி இதையெல்லாம் கண்டுக்காமலே அறைக்கு ஓடி வந்துவிட்டாள், படிக்க.

— சந்திரோதயன் —

அதற்குள், அப்பா பஸ்ஸுக்குத் தயாராக வருகிறார். ஏனோ தெரியவில்லை; அவர் முகம் சற்றுக் கடுகடுப்பாகத் தோன்றுகிறது. ‘இந்த ஒரு வாரமாகவே தினம் தினம் நாலரைமணிக்கே எழுந்து கோர்ட்டுக்குச் செல்ல வேண்டி இருக்கிறதே!’ என்ற ஆத்திரம் காரணமாக இருக்கலாம்.

இந்தத் தருணம் பார்த்து ‘தோண்டிக் கிழவி’ அப்பாவிடம் வருகிறாள். அப்பாவின் கடுகடுப்புத் தெரியாமல், “குழந்தை தோண்டியை உடைச்சிட்டா!” என்று முறையிடுகிறாள். (தோண்டியை உடைத்தது நந்தினிதான் என்பது அவளது கணிப்பு.) அப்பாவுக்கு ஆத்திரத்தோடு ஆத்திரம். வந்த வேகத்தில் படித்துக்கொண்டிருந்த நந்தினிக்கு முதுகில் இரண்டு வைத்து விட்டுப் புறப்பட்டு விட்டார், பஸ்ஸைப் பிடிக்க.

‘பாட்டியின் தோண்டியை உடைத்தாயாமே? ஏன் உடைத்தாய்?’ என்றெல்லாம்குழந்தையை விசாரித்துக் கொண்டிருக்க அவருக்கு ஏது நேரம்?

குழந்தை, கண்ணைக் கசக்கிக் கொண்டே அம்மாவிடம் வருகிறாள். ‘அப்பா ஏன் என்னை அடிச்சார்?’ என்று அம்மாவைக் கேட்கிறாள். “நீதான் பாட்டியின் தோண்டியை உடைச்சாயாமே! அதற்குத் தான்!” என்கிறாள் அம்மா.

குழந்தைக்கு அப்போதுதான் புரிகிறது.

“பாட்டியின் தோண்டியை உடைச்சது நானில்லேம்மா; பக்கத்து வீட்டு ராதா!” என்கிறாள். அம்மாவுக்கும் அப்போது தான் புரிகிறது. பாட்டியைக் கூப்பிட்டு விசாரிக்கிறாள். பாட்டி. “தோண்டியை உடைத்தது ராதா தான்!” என்று இப்போது ஒப்புக் கொள்கிறாள்.

“சரி; சரி! ஏதோ ‘தவறு’ நடந்திடுச்சி...” என்று குழந்தையைத் தேற்ற ஆரம்பிக்கிறாள் அம்மா.

‘தவறு’ என்ற வார்த்தையை உச்சரிக்கக் கேட்டதும் குழந்தைக்குச் ‘சுரீர்’ என்கிறது.

‘ஓ! இது...ராத்திரி அப்பா உபயோகித்த வார்த்தையாச்சே!’ என்று குழந்தையால் யூகிக்க முடிகிறது. யூகித்ததோடு குழந்தை நின்றுவிடவில்லை. அம்மாவைக் கேட்கிறாள்;

“ஏம்மா! தோண்டியை உடைச்சது நான்கானு?’ன்று விசாரிக்காமலே அப்பா என்னை அடிச்சிட்டுப் போயிட்டாரே. இந்தத் ‘தவறு’க்கு அப்பா என்கிட்டே மன்னிப்புக் கேட்பாரோ?”

குழந்தை இப்படிக் கேட்டதும் அம்மாவுக்குத் தூக்கி வாரிப் போடுகிறது.

“இதென்ன விபரீதம்? பெற்றவர்-பிள்ளையிடம் மன்னிப்புக் கேட்கிறதாவது?” என்கிறாள் அம்மா.

குழந்தை அம்மாவை விடவில்லை. “ராத்திரி அப்பா சொன்னாரே; தவறு செஞ்சிட்டா மன்னிப்புக் கேட்டுடணும்’ என்று”—குழந்தை சொன்னதும் அம்மா ஆடிப் போகிறாள்.

‘ராத்திரி சொன்னதை இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாளே, குழந்தை? இதற்கு என்ன பதில் சொல்வது?’—அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. சிரித்து

சிறுகதை!

மழுப்பி குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறாள் அம்மா.

'அப்பா வரட்டும்; இதைப் பற்றிக் கேட்கலாம்!' என்ற எண்ணத்தில் குழந்தை பள்ளிக்குப் புறப்படுகிறாள்.

பொழுது சாய்கிறது.

குழந்தை, பள்ளி முடிந்து வீட்டுக்கு வருகிறாள். வேலைக்காரர்—சாமிநாதன் தலையைச் சொரிந்து கொண்டு வாசலில் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, "அப்பா வந்துவிட்டாரா?" என்று குழந்தை கேட்க, "இன்னும் வரவில்லே!" என்று பதிலளிக்கிறது, சாமி.

குழந்தை அறைக்குப் போகிறாள். சாமியும் தலையைச் சொறிந்து கொண்டு குழந்தையின் அறைக்குள் நுழைகிறது.

"என்ன சாமி! தலையைச் சொறியறே? என்ன வேணும்?" என்று கேட்கிறது குழந்தை.

"பொடி வாங்க அஞ்சு காசு" என்று சொல்லி ஏழு வயது குழந்தையிடம் குழைகிறது அறுபது வயசு 'சாமி.'

சாமியின் நிலைமையை யூகித்துக் கொண்ட குழந்தை 'விசுக்'கென்று பெஞ்சிலிருந்து குதிக்கிறது. ஓடிப் போய்ப் பெட்டியைத் திறக்கிறது. அப்பா தரும் சில்லரையைப் போட்டு வைத்திருக்கும் உண்டியலை எடுக்கிறது. உண்டியைக் குலுக்கி ஒரு இருபத்தைந்து காசு நாணயத்தை எடுத்து சாமியிடம் நீட்டுகிறது.

காசை வாங்கிக்கொண்டு நகராமல், சாமி இன்னமும் அறைவாசலிலேயே நின்றிருக்கிறது.

"என்ன சாமி! இன்னும் நிக்கறே?" என்று அக்கறையுடன் விசாரிக்கிறாள் குழந்தை.

"அதும்மா......தவறுதலா ஒரு காரியம் செஞ்சுட்டேன்!" என்று சொல்லிவிட்டு மீண்டும் தலையைச் சொறிகிறது சாமி.

'தவறு' என்று உச்சரிக்கக் கேட்டதும் குழந்தைக்கு 'சுருக்' என்கிறது.

"என்ன தவறு?"—குழந்தை.

"அதும்மா......நேற்றைக்கே அப்பா லாண்டரியில் துணியை வாங்கி வைக்கச் சொன்னார். நான் மறந்துட்டு இன்னிக்குத்தான் போனேன். லாண்டிரி பூட்டி இருக்கு...என்ன பண்ணுவாரோ... ஏது செய்வாரோ...தெரியல்லே!" சாமிக்கு நடுக்கம் காண்கிறது.

"என்ன சாமி இப்படிப் பண்ணிட்டே! இப்ப பஸ்ஸிலேருந்து வந்ததும் கட்டிக்க அறவே துணி இல்லே போலிருக்கே, அப்பாவுக்கு?"—குழந்தையும் சேர்ந்து பதறுகிறாள்.

"அதுதாம்மா எனக்கும் பயமாயிருக்கு!" என்று, சாமியும் சேர்ந்து நடுங்குவதைப் பார்த்ததும் குழந்தைக்குத் தன்னையும் மீறி சாமியின் மேல் அனுதாபம் பிறக்கிறது.

'டக்'கென்று ஒரு யோசனை.

'தவறு செஞ்சிட்டா என்ன? மன்னிப்புக் கேட்டுட்டா அப்பா விட்டுடுவார்' என்று.

"பயப்படாதே, சாமி! 'தவறு பண்ணிட்டேன். மன்னிச்சிடுங்கோ'ன்னு சொல்லு. அப்பா ஒண்ணும் கோச்சுக்க மாட்டார்" என்கிறாள் குழந்தை.

சாமி 'குபுக்'கென்று சிரிக்கிறது. குழந்தையின் குழந்தைத்தனத்தைக் கண்டு. சிரித்து விட்டு அறையை விட்டுப் போய் விடுகிறது.

இருட்டக் கொஞ்ச நேரம் என்க. அப்பா வீட்டுக்குள் வந்து நுழைகிறார். அவர் வந்ததும் வராததுமாய், காலையில் நடந்த சம்பவத்தை—அந்த அப்பா தவறுதலாக குழந்தையை அடித்துவிட்டதையும், 'அப்பா என்னிடம் மன்னிப்புக் கேட்பாரா?" என்று குழந்தை தன்னைக் கேட்டதையும்—சொல்கிறாள், அம்மா.

'காரணமில்லாமல் என்னை அடித்த குற்றத்துக்கு அப்பா என்னிடம் மன்னிப்புக் கேட்பாரா?' என்று குழந்தை கேட்டதாகக் கேள்விப்பட்டதும் அப்பாவுக்குத் தூக்கிவாரிப் போடுகிறது.

"இப்போ, குழந்தைக்கு என்ன சமாதானம் சொல்லப் போறீங்க?" என்று கேட்கிறாள் அம்மா.

கொஞ்ச நேரம் திகைத்துப் போயிருந்த அப்பா, "எல்லாம் நான் பார்த்துக்கறேன்!" என்று சொல்லிவிட்டு, குழந்தையின் அறைக்குள் நுழைகிறார்.

கதவு திறந்ததும் குழந்தை ஆவலுடன் நோக்குகிறது.-அப்பா நின்றிருக்கிறார்.

அவர் கையில்—

ஒரு பிஸ்கட் பாக்கெட்!

'இந்த நேரத்தில் பிஸ்கட் எதற்கு?' — குழந்தைக்குப் புரியவில்லை.

"நந்தினி..." அப்பா குழைகிறார்; "தோண்டியை உடைச்சது நீதானு?'ன்னு கேட்காமலே உன்னை அடிச்சிட்டேன் இல்லே?"

"........."

—அப்பாவின் குழைவுக்கு குழந்தை பதில் சொல்லக் காணோம். அப்பா, தனது தவறுக்கு, தன்னிடம் 'எப்படி,' 'எப்போது?' மன்னிப்புக் கேட்பார்? என்ற ஆவலில் அவர் வாயையே பார்த்த வண்ணமிருக்கிறது,

அப்பா, திடுமென்று பிஸ்கட் பாக்கெட்டைக் குழந்தையிடம் நீட்டுகிறார்.

குழந்தை திகைத்து விட்டது.

'பிஸ்கட் பாக்கெட் எதற்கு?

மன்னிப்புக்குப் பதிலாகவா?... அப்போ?...

'தவறு செய்பவர்கள் மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டும் என்கிற மாதிரி நேத்தைக்குத் தத்துவம் பேசிய அப்பா இன்று—?'

—குழந்தைக்கு அப்பாவின் 'முரண்பாடு' விளங்குகிறது.

திடுமென்று குழந்தைக்கு ஒரு யோசனை: 'அப்பாவின் முரண்பாட்டை அவர் உணரச் செய்ய வேண்டும் அல்லது 'அது' முரண்பாடு அல்ல' என்று நிருபிக்க வேண்டும்:' என்கிற மாதிரி ஒரு துடிப்பு,

குழந்தை 'விசுக்' கென்று பெஞ்சிலிருந்து குதிக்கிறது, ஓடிப் போய் தனது பெட்டியைத் திறக்கிறது. உண்டியலை எடுக்கிறது. ஒரு ரூபாயைத் தேடி எடுப்பிறது...

"எதற்குப் பணம்?" — அப்பா திகைத்துப் போய்க் கேட்கிறார்.

"அதுப்பா...நீங்க எனக்கு ஒரு தவறு பண்ணிட்டிங்க; அதுக்கு... ஒரு பிஸ்கட் பாக்கெட்டை வாங்கிக் கொடுத்திட்டீங்க... சரி...அதே மாதிரி நம்மசாமி உங்கவிஷயத்தில் ஒரு தவறு பண்ணிட்டது. ஆமா தவறு பண்ணிட்டது.....லாண்டிரி துணியை வாங்கி வைக்கவில்லே... அது செய்த தவறுக்கு அது உங்களுக்கு ஒரு பிஸ்கட் பாக்கெட் வாங்கித் தரணுமோ இல்லியோ? அதுகிட்டே ஏது பணம்? அதுக்காகத்தான் இந்த பணத்தைக் கொண்டு போய்க் கொடுக்கப் போறேன்...வர்ரேன்..." -குழந்தை சாமியைத் தேடி ஓடுகிறுள்.

அப்பா—அந்த இளம் தந்தை—திகைத்து நிற்கிறார். *

'செங்கோலும் மென்தோளும்'

— சீவ. நடராசன் —

எத்துணைப் பெரிய வெற்றி அவனுக்கென்று பன்னெடுங்காலம் காத்துக் கிடந்திருக்கின்றது! எத்தனையெத்தனை முகப்பு வாயில்கள் அவனது வெற்றிச் சிறப்புக்களை தோரணமின்றி வரவேற்க ஏங்கித் துடித்திருக்கின்றன. நெற்றித் திலகமிட்டு வெற்றியுடன்வா என வழியனுப்பிவைக்க வாய்ப்புக் கிட்டாத தாய்க்குலத்தின் எத்தனை விளக்குகள் அவனது வெற்றிக்கு ஆரத்தியெடுத்து வெற்றிப் பண் பாடி வரவேற்கச் சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றன!

இத்தனை மாண்புகளுக்கு அவன் உறைவிடமாகத் திகழ்ந்திருந்தும் இந்த வெற்றிகளையெல்லாம் மனத்தளவில் அணுவளவேனும் நினைத்திருக்கவேண்டுமே! நினைத்தானா? இல்லை, இல்லவேயில்லை!

வெற்றியை விளைப்பனவும்,விளைவிக்கும் பாதைதேடிச் செல்வனவுமான கைகளும் கால்களும் விலங்குகளால் பிணிக்கப்பட்டுச் சிறைக் கோட்டத்துக்குள் அடைக்கப் பட்டபோதும் சரி, நாம் செயலிழந்துவிட்டோம். கறைபடிந்துவிட்டது நமது கடமை வாழ்வு என உறைக்குள் உறங்கிக் கிடந்த வாளைக்கண்டுக் கலங்கிக் கண்ணீர் வடித்தபோதும் சரி, தொடர்ந்த எண்ணங்களால் அலுத்து அலுத்து ஓய்ந்தபின், ஓய்ந்துவிட்டாயா? ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறாயா எனத் தன்னைத்தானே கடிந்து, தனக்குத்தானே தேறுதல் சொல்லிக்கொண்டு செயலிழந்து கிடந்தபோதும் சரி நினைத்திருப்பானா இத்துணைத் தகைமையுடைய வெற்றியை. இல்லை.

அந்த இளம் நெஞ்சுக்குள்ளே எத்தகைய வேறு நினைவுகள் படர்ந்திருக்கும் அதை முன் வைத்து எத்தனை இளமைக் கனவுகள் தொடர்ந்திருக்கும்.

அவனை அலைக்கழிக்கும் நினைவுகள் என்னென்ன? அவனைக்கிறங்க வைக்கும் கனவுகள் தான் என்ன?

நெற்றி நரம்புகள் விண்ணென்று புடைக்க, புருவம் நெறிப்ப உரோமக் கால்கள் சிலிர்ப்ப நாம் உரிமைக் குரல் எழுப்பப் போகிறோம், உயிர்ப்பலி தரப் போகிறோம் உரியதை உரிய முறையிலே மாற்றாரும் போற்றிப் புகழ்கின்ற வகையிலே பெறப் போகிறோம் என்று நெஞ்சளவிலும் நினைத்துப் பார்க்கவியலாத அளவுக்கு அவன் தாயத்தாரின் சூழ்ச்சி வலையிலே அகப்பட்டுக் கொண்டு கிடந்தானே அவன். அந்தப் பழங்காலச் சோகநினைவுகளை நினைவு கூர்கின்றானா!

மாற்றாரும் அவன் இயலாமையை எள்ளி நகையாடியதைக் கேட்டுக் கொதித்து ஆர்த்தெழுந்து வேங்கைப் புலியென மாற்றாரின் களத்திலே பாய்ந்து பெறற்கரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றானே அந்த வீரமிக்க நிகழ்ச்சிகள் அவன் இதயத்துள் புகுந்து எங்கே வெற்றி வெற்றியெனும் மண்ணாசையைத் தூண்டி விட்டிருக்கிறதா?

அவன் போர் முகத்திலே புரிந்த வீரச் செயல்கள் எத்தனை பகைவரிடம் வாளும் அவன் கரமும் எப்படிச் சுழன்றன? எத்துணை வேகத்திலே தன்னை வஞ்சித்தவர்களின் சிரங்களைக் கொய்து சூறையிட்டிருக்கிறான்.

பாண்டியனின் வலி குறைந்தது. குடநாட்டரசரின் மனத்திருந்த திடம் செயலற்றுப் போயிற்று. அவன் பெயரைக் கேட்டாலே வடபுலத் தரசர்கள் அஞ்சி நடுங்கித் தொட்டாற் சிணுங்கியென முகத்தைச் சுளித்து வாடி வதங்கி ஓடி ஒளிந்தனர். பழைய அருவாளநாட்டரசன் அவனுக்கு அடி பணிந்து ஏவலாளனாக எடுபிடி வேலை செய்யும் அளவுக்கு வெற்றியைப் பெற்றிருக்கிறானே இத்தகு வெற்றியினையா அவன் மேலானதாகக் கருதுகின்றான்.

வஞ்சத்தால் மடுக்குழிக்குள் வீழ்ந்துபட்டு பிளிறி வெளிவந்த களிறே போல் சிறையிலிருந்து தப்பி வெளிவந்து விளைத்திட்ட வீரச்செயல்கள் எத்தகுப் பெருமைப் பெற்றவை!

நெடுந் தூண்கள் முறிந்து வீழ்ந்தன. வரலாற்றைப் பிற்காலத்திலும் விளங்கவைக்கும் நுண்கலை மாளிகைகள் சரிந்து மண்மேடாயின. அவன் புகுந்து போர் புரிந்த இடம்யாவும், காவிரிதான் நிறம் மாறி செந்நீர் வண்ணமாகிப் பெருக்கெடுத்து ஓடுகின்றதோ என்கின்ற அளவுக்குக் குருதி வெள்ளம் ஓடியது.

அவன் என்ன இளையவன் தானே! நம்மை எதிர்த்து வெற்றிக்கொடி நாட்டும் வலிவு அவனுக்கெங்கே வரப்போகிறது. அத்தகைய ஆற்றலை உணர்த்தக் கூடிய அறிவைப் பெறாத சிறிய வயதுதானே என எண்ணி இறுமாப்பு அடைந்திருந்தனர் அவனது தாயத்தார்.

மலராத மொட்டும் மணம் வீசும் என்ற உண்மையை உணராத அவர்களின் குறுமதி அவனை இளையவனாக்கிற்று. வலி குறைந்தவனாக்கிற்று. தெளிவு அற்றவனாக்கிற்று. அதனால்தான் அவர்களின் கண்களுக்கு அவன் புழுவாக நெளிந்தான்; புன்மைத் தேரையாக மதிக்கப்பட்டான்; புழுதியினும் இழிந்தவனாகத் தோற்றமளித்தான்.

இவனால் முடியுமா என இழித்தோரும் பழித்தோரும் வெட்கும் வண்ணம், அவன் தன் ஆற்றல் களத்திலே தெளிவ' பட்டது. புலியானான். புயலானான், வானில் வட்டமிடும் வல்லூராய் களத்தே சுற்றிப் பறந்தான்.

மண் என்ன விண்ணிலும் சாடுவான். நினைத்ததை முடிக்க வல்லவன் என வரலாற்றில் பதியும் அளவிற்கு அவனது செருகளத்து வலிமை அமைந்திருந்தது.

அந்தத் தனக்கே யுரிய தனிச் சிறப்பை வைத்துத்தான் போரில்

இலக்கியம்

வெற்றிபெற்றான். வாழ்வோடு கலந்துரைய வேண்டிய தாயத் தாரே வஞ்சக எண்ணம் கொண்டு அவன் நாட்டைக் கைப்பற்றிய இழிவான செயலுக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

நெடுநாட்கள் தன் நெஞ்சத்தே புதைத்து வைக்கப்பட்ட தன் னுரிமை கிளர்ந்தெழத் தலைப்பட் டது. வெட்ட வெட்ட துளிர்த் தலைப்போல அவனின் இயலாமை அவனைக் குத்திக் காட்டக் காட்ட அவன் வலிமை பெற்றான். தன் னுரிமை காப்பாற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சி அவனுக்கு மேலானதாக இனிமையான தாகத் தென்படவில்லை.

இவைகளைப் பெருஞ் சிறப்பு டையதற்குரியதாக, பெறற்கரிய பெரும்பேறு கொண்டதாகக் கரி காற் பெருவளத்தான் கருதிலு னில்லை.

கரிகாலன் இயலாமை முன் னிட்டு மாற்றார் கண்களுக்கு இளை யனுகத் தென்பட்டானே ஒழிய அவன் இளையனல்ல — இளைஞன்.

வாள்வலிவும் தோள்வலிவும் நிரம்பப் பெற்ற காவிரிப்பூம் பட்டி னத்துக் காரிகையரின் ஒருதலைச் சார்பான காதற் தலைவன்.

செந்நெல் வயலெல்லாம் பொன் கொழிக்கச் செய்ய கரை புரண்டு வரும் காவிரியைப் போலவே அவன் புகழும், வீரமும் பெருக் கெடுத்துப் பரவினதை கண்முன் னேயே கண்டுகளிக்கும் பேராற்றல் மிகு புரவலன் கரிகாற் பெருவளத் தான் என்னும் திருமா வளவன்.

இராக்காலங்களில் காவிரிப் பூம் பட்டினத்து இனியகாட்சிகளை நேரிலும் கண்டிருக்கிறான். நெஞ் சாலும் நினைத்திருக்கிறான் நினை வுகள் நெகிழத் தானே அனுபவித் திருக்கிறான்.

நமக்கென்று ஒரு பாதை உண்டு!

"நமக்காக ஒரு பாதையை நாம் தேர்ந் தெடுத்திருக்கிறோம்; அந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும்; இடையில் உள்ள தடங்கல்களைக் கண்டு தயங்கி நின்றுவிட மாட்டோம்!

"அமைதி—முன்னேற்றம்—செழிப்பு ஆகிய குறிக்கோள்களை நோக்கி முன்னேறிச் செல்ல விரும்புகிறோம்; அந்த முன்னேற்றத்தை எந்த நாடும் தடுத்து நிறுத்திவிட முடியாது!

"சமாதான-சனநாயகப் பாதையில் செல்ல இந்தியா உறுதிகொண்டிருக்கிறது: இந்தப் பாதையினின்றும் தவறிச் செல்ல எந்தச் சக்தி யும் நம்மைக் கட்டாயப்படுத்த முடியாது!

"இந்திய மக்கள் துணிச்சலோடு வாழ்வார் கள்—துணிச்சலுடன் போராடுவார்கள்—அவசி யம் ஏற்பட்டால் துணிச்சலுடன் உயிரைத் தியாகம் செய்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை!

"நெருக்கடி மிகுந்த நாட்கள் இன்னும் கடந்து சென்றுவிடவில்லை; முன்னெச்சரிக்கை யுடன் இருந்துவர வேண்டும்; மீண்டும் போர் ஏற்படுமானல்—அதை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும்; போர் வராவிட் டாலும், நாம் சமாளிக்கவேண்டிய வேறு பல பிரச்சினைகள் இருக்கின்றன!

"இந்தியாவின் விவகாரங்களில் சில வல் லரசுகள் தலையிட்டு வருகின்றன; இப்போது காலம் மாறிவிட்டது; எனவே, எந்தத் தலையீட்டையும் நாம் சகித்துக்கொண்டிருக்க மாட்டோம்!

"வரலாற்றின் திருப்புமுனையில் நாம் இருக் கிறோம்; காலப் போக்கில், அயல்நாட்டு உதவி களை நாம் உதறித் தள்ளியாக வேண்டும்; நெருக்கடியான நேரத்தில் சில நாடுகள் நமக்கு அளித்துவந்த உதவியை நிறுத்தி வைத்தன; இப்படிப்பட்ட செயலின்மூலம் நம்மைக் கட்டா யப்படுத்த அந்த நாடுகள் முயற்சி செய்தன; எனவே, எல்லாத் துறைகளிலும், 'தன் கையே தனக்கு உதவி' என்ற நிலையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்; வெளிநாட்டு நிர்ப்பந்தங் களுக்கு இதுதான் நாம் அளிக்கும் பதிலாகும்!

"நாம் யாரைப் பார்த்தும் அஞ்சிக் கிடக்க வில்லை; அதேபோன்று, யாரையும் நாம் மிரட்ட வும் இல்லை!

"இப்போதைய போரின் விளைவுகள், சில பெரிய வல்லரசுகளின் கணக்குகளையெல்லாம் கவிழ்த்துவிட்டன; உலக வரலாறே இப்போது மாறிவிட்டது!

"வங்கதேச விடுதலை, இந்தியாவின் இலட்சி யங்களுக்கும் — கொள்கைகளுக்கும் கிடைத்த வெற்றியாகும்; நாம் மேற்கொண்டநிலை சரி யானது என்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டது."

—தலைமையமைச்சர்
இந்திரா காந்தி

இல்லறத்து ஈடுபாடுடைய தலைவன் தலைவியர் இராக்காலத்து நடப்புக்கள் நடந்த பின்னுலே தான் முன்னுலே அணிந்திருந்த ஆடைகளை தன்னுலே களைந்தெறியப்பட்ட ஆடைகளை மீண்டும் உடுத்துதற்குப் பதிலாக தன் காதற்கொழுநனின் ஆடைகளை உடுத்துக் கொள்வராம்.

என்னே அவர்தம் மயக்கம் தன்னுடைய ஆடை இதுதான் என்று உணரமுடியாமல் அதைத் தேடி எடுக்கின்ற நேரத்தில் வீணுகும் நினைவுகளை வீணடிக்க விரும்பாமல் தன் காதற்கணவரின் ஆடைகளை உடுத்திக்கொள்கின்ற அளவுக்கு அந்தப் பெண்கள் தங்களை மறந்துவிட்டிருக்கிருர்கள். தான் ஒரு பெண் என்ற நினைவையே இழந்துவிட்டிருக்கிருர்கள்.

அது மட்டுமா? இரண்டு கோப்பைகளிலே கனிச்சாறு வைக்கப்பட்டிருக்கும். ஒன்று அவளுக்கு மற்ருென்று அவனுக்கு. அவள் பருகக் கூடிய அளவைக்காட்டிலும் அவனுடைய கோப்பையில் கனிச்சாறு மிகுந்திருக்கும்.

கலவியில் ஈடுபட்டுத் தன்னுடைய காதல் வெறியை எல்லாம் தீர்த்துக்கொண்டு அந்த உணர்விலேயே புதிய மயக்கத்தைப் பெற்றிருக்கும் அந்தப் பெண் தனக்குரிய கோப்பையிலுள்ள கனிச்சாறைப் பருகிவிட்டு அவனுக்குரிய கோப்பையிலுள்ள கனிச்சாறையும் விடாமல் பருகி விடுவாளாம். பின்னர் தன் காதலன் பருக வில்லையே எனத் தவிக்கவும் செய்வாளாம்.

அவன் சூட வேண்டிய கண்ணியை அவள் சூடிக்கொள்வாள். இத்தகு நடுயாம மயக்கங்கள் நிலாக் காலங்களிலே காதற் காவியத்தை நீடுபுகழ் விளங்கத்தக்கதான நயத்தை விளைவித்துக் கொண்டிருப்பதைக் கரிகாலன் அறியாமலிருக்கச் சிறு பிள்ளையாக இல்லையே!

காதலர்களின் உலகமே தனியாயிற்றே! பேசும் மொழியே யாரும் பள்ளியிற் சென்று பயிலாதமொழியாயிற்றே! செயலும் அப்படித் தானே!!

பார்ப்பதற்கே இருக்கின்ற கண்கள்! அவைகள் பார்க்கமட்டுமா செய்கின்றன. யாராலும் அறிய முடியாமல் ஊமை மொழியும் பேசுகின்றதே!

செவிகளுக்குக் கேட்டல் மட்டுமே தொழில், இது இயற்கை வகுத்துவிட்ட மரபு. இருளின் மையத்தே களவியலைக் கை தேர்ந்த முறையில் செயலாற்றுங்கால் அந்த நேரத்திற்கு மட்டும் யாராவது வருகின்ருர்களா? வரும் அரவம் கேட்கின்றதா என்த் தடம் நோக்கிச் செவி திருப்பும் விந்தை வேறு எந்த நிகழ்ச்சியின் போது சிறப்பைப் பெறும்.

உண்ணுதற்கென்றே உள்ளவை இதழ்களும் நாவும். அவைகளா வது தத்தம் கடமையைச் செய்கின்றனவா? இல்லை உண்பதற்கென்றே அமைந்த உறுப்புக்கள் உண்ணப்படும் பொருள்களாக மாறிவிடும் விந்தை எந்த உலகத்தில் நடை பெறுவதாகக் கேட்டிருக்கிறோம்.

இத்தகைய சிறப்புக்கள் கொண்டது காதலர் உலகம்.

காதல் நினைவுகளை நினைத்து நினைத்து மயங்கிக் கிடக்கின்ற கரிகாலன் நெஞ்சிலே எந்த போர்க்களம் நினைவுக்கு வரும் எந்தப் பகைவன் அவனுடைய நினைவுக்கு வருவான் எந்த வெற்றிதான் அவன் நெஞ்சில் ஆழப் பதியும்.

போர்க்கள நிகழ்ச்சிகள் எவற்றையுமே கரிகாலன் தன் நெஞ்சில் நினைத்தானில்லை.

நெற்றித் திலகம் மாறுபட நறுமணக் களபம் குழம்பிச் சிதைய நடத்தப்படுகின்ற அந்த ஊமை நாடகம் பெறும் சிறப்பினை வேறு எதுதான் பெறும்?

நாடு போற்றும் வெற்றியைவிட பன்னுட்டு மன்னர் பலர் பணிந்தேத்தித் தாள் மலர் பற்றப்படுத்துக் கிடந்த வெற்றியினைவிட புலவர் பலர் புதுக்கருத்துக்கள் ஊனும் புனலாக பனுவல் பாடிப் புகழ்கின்ற வெற்றியைவிட, பாழ்படுத்தப்பட்டவை சிதைந்தவை உருத்தெரியாவல் குலைந்து போனவை இவைகள் வரலாற்றுத் தடமாக மாறிக் கூறும் வெற்றியைவிட கரிகாலன் வேருென்றைத் தானே மேலானதாகக் கருதுகின்ருன்.

பொருது நின்றவர் அனைவரும் புறம் கண்டோடுகின்ற நிகழ்ச்சிக்குத் தோற்றுவாயாக உள்ள வலிமையைப் பெற்றிருக்கின்ற தோள்கள் செவ்வாழைத் தண்டொத்த மென்தோள்கள்மீது சாய்ந்திருத் தலைத்தான் இவ்வுலக இன்பத்துள் தலையாயதெனக் கண்டிருக்கிருன் கரிகாலன் என்னும் காதற்றலைமகன்.

பகை கண்ட இடத்து வாளையும், தகை விளங்க விழையுமிடத்துச் செங்கோலையும்பற்றியுள்ள கைகள் மென்தோள்கள்தனைப் பற்றியிருப்பதைப் பேரின்பப் பெரும்பேருகக் கருதிக் கொண்டிருக்கிருன்.

தமிழகத்து வீர மண்ணில் காதலும் அறுவடைப் பொருளாக இருந்திருக்கிறது என்பதற்குஇதை விட வேறென்ன சான்று வேண்டும்.

பதினறு நூருயிரம் பொன் பரிசு பெற்றதாகப் புகழ்பாடும் பட்டினப்பாலை யென்னும் நூலின்கண் திருமாவளவன் எனும் கரிகாலனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு, உருத்திரங் கண்ணனுர் என்னும் பெரும் புலவர்,

திருமாவளவன் தெவ்வர்க்
 கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென்
 தோளே.

என்ற நயமிகுந்த வரிகளால் காதலும் வீரமும் தமிழரின் மரபு என்பதைச் சுட்டிக் காட்டுகின்றபோது உலகின் மிகமுதுமையான உயர்ந்த இனம் தமிழினம்தான் என்பது தெளிவாகின்றதன்ருே! *

புதுப் பரணி!

மாற்ருனின் தோட்டத்து
 மலர்முல்லைக்கும்
மணமுண்டு தம்பிஎனும்
 பொன்னுரையால்
ஏற்றமிகு வெற்றிகண்டு
 எதிர்க்கட்சிக்கும்
இனியவராய் எந்நாளும்
 நண்பர்ஆகி
வீற்றிருந்த அண்ணுவை
 இழந்தோ மேனும்
விட்டகன்ற நற்பணிகள்
 தலைமேற் கொண்டு
போற்றிடுவோம்! பொய்யர்களின்
 புனுகுப் பேச்சை
புதைத்திடுவோம்! புதுப் பரணி
 பாடுவோமே!

—என். ஞானகிராமன்.

காஞ்சி

பொங்கல் மலர்

(1972)

மலரில்

அறிஞர் அண்ணா

அவர்களின் நெடுங்கதை!

மற்றும்

அமைச்சர்கள், கழகத் தலைவர்கள்

முன்னணி எழுத்தாளர்கள்

பலரது எழுத்தோவியங்களுடன்

மூவண்ண முகப்போடு முத்துச்சரமாகத்
தயாராகிறது.

விலை ரூபாய் இரண்டு

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-55, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.